உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

எனப் பெயரிய

## சைவ மஹாசபையின்

மாதாந்தப் பத்திரிகை.

---

## 1917 ௵.

## மூன்றாவது மலர்.

---

இது

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்.

ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்

சமர்ப்பிக்கப்பெற்றது.

---

பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூல முதலியார்.

(Retired Accountant, Military Accts., Department.)

நெ. 43, பாளையப்பன்வீதி, ஏழுகிணறு, சென்னை.

---

சென்னை:

வைதீக சைவ அச்சுக்கூடம்.

1917

விலை ரூபா 1.

(தபாற்செலவுட்பட.)

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

அக்கிராசனர்.

ஸ்ரீமான், சதுரை, ராஜாகண்ணு முதலியாரவர்கள் B. A.
Supdt. Accountant Genreal's Office.

போஷகர்கள்.

ஸ்ரீமான் யல். இரத்தினவேல் செட்டியாரவர்கள்,
Dubash, Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், B. A., B. L.
Official Referee, High Court.

,, ராவ்சாஹிப் - பி. மாசிலாமணி முதலியாரவர்கள்,
Engineering Contractor.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்,
Presidency Post Master.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்,
Merchant, Periyanna Mudaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்,
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்,
Retired Sub-Engineer, Mint Street, Madras.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அட்டவணை.


| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு | 111 |
| அக்கரங்களின்றும் அகரவுயிரின்றேல் | 25-211 |
| அருச்சுனன் பாசுபதம்பெற்ற சரித்திரம் | 143-170-195-222-230 |
| ஆயுள் சந்தா | 109-135-160-184 |
| ஆருத்திராதரிசனம் | 226 |
| இந்துசன்மார்க்கசபை—தென் ஆப்பிரிக்கா | 183 |
| இராவணன் கணேசமூர்த்தியைப் பூசித்த சரித்திரம் | 20 |
| உருத்திராக்க மகிமை | 36 |
| ஏகான்மவாதமும் வைதிகசைவமும் | 212 |
| கங்காதாரணம் | 101 |
| கச்சியப்ப சிவாசாரியருக் கொருகோயில் | 212 |
| கடவுள் உண்டா, இல்லையா? | 217 |
| கந்தசஷ்டி விரதம் | 202 |
| குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் | 41-71-80 |
| கூர்மபுராணத்து விநாயககாப்பு | 119-141-163 |
| சந்தான குரவர் | 14 |
| சந்திரன் விநாயகக்கடவுளைப் பூசித்த சரித்திரம் | 129 |
| சந்நியாசி | 147 |
| சாக்கியநாயனார் புராணம் | 92 |
| சிதம்பர தத்துவார்த்தம் | 30-76 |
| சிவஞானபோதம் | 6-17-33-49-73-89-113-137-161-185-209 |
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | 11-53 |
| சுபசமாசாரங்கள் | 232 |
| சைவம் | 1 |
| சைவ சித்தாந்த மகாசமாஜம் | 230 |
| சைவ சுராச்சியம் | 125 |
| சைவ பத்திரிகாசிரியர் சரித்திரச் சுருக்கம் | 154-179 |
| சைவப்பத்திரிகை | 205-208 |
| சைவ பாடசாலை | 108 |
| தத்துவார்த்த வாராய்ச்சி | 86 |
| தாயுமானசுவாமிகள் மதம் | 187 |
| திரிபதார்த்த விளக்கம் | 166 |
| திருநந்திதேவர் சரித்திரம் | 93-121 |
| திருமூலநாயனார் புராணம் | 157 |
| திருவெம்பாவை | 227 |
| தீபாவளிபண்டிகை | 201 |

| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும்? | 175-205 |
| பஞ்சாக்கர மகிமை | 100-132-151 |
| மஹோபகாரம் | 82 |
| மாயாவிளக்கம் | 139 |
| முப்பொருளுண்மை | 191 |
| விருஷபதேவர் சரித்திரம் | 134 |
| வைதிக சிவஞானபோதம் அவைதிக சிவஞானபோதமாக ஆக்கப்பட்டது | 28 |
| வைதிக சைவ அச்சுக்கூடம் | 98 |


---

# சைவசமயிகளுக்கு எச்சரிப்பு!

ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் பைபில் என்னும் ஒரு சிறு புத்தகத்தை வைத்துக்கொண்டு உலகடங்கலும் கிறிஸ்து சமயத்தைப் பரப்பிவருகின்றார்கள். கிறிஸ்து பாடசாலையில்லாத ஊர் இல்லை. கிறிஸ்து கோயில் இல்லாத தேசமில்லை. கிறிஸ்து சமயத்தினர் இல்லாத இடம் இல்லை. ஞானஸ்நானம் என்னும் கிரியையால் சமயப் பிரவேசம் பண்ணாத கிறிஸ்தவரில்லை. பைபில் படிக்காத கிறிஸ்தவரில்லை. சைவ சமயிகளாகிய நமக்கோ ஆரியவேதங்களும், தமிழ்வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும், ஞான சாஸ்திரங்களும் அளவற்றன விருக்கின்றன. இருந்தும், நம்முடைய தமிழ்நாட்டிலுங் கூட நம்முடைய சைவசமயம் பரவியில்லை. சைவபாடசாலைகளை வைத்து நம்முடைய சிறுவர்களுக்குச் சைவசமய வொழுக்கங்களைக் கற்பிப்பாரில்லை. சமயதீக்கை பெற்றிருப்போர் பதினாயிரம் பேர்களுள் ஒருவரைக் காண்பதும் அரிதாயிருக்கிறது. சைவநூலுணர்ந்தோர் இலட்சம் பேர்களுள் ஒருவர் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. நம்முடைய சிறுவர்கள் இலட்சக்கணக்காக கிறிஸ்து பாடசாலைகளிலோ, நாத்திகப் பாடசாலைகளிலோ படித்துக் காலங்கழித்து, சமயக்குருடராய் சைவ வொழுக்கங்களைக் கைவிட்டிருப்பதுடன், உத்தியோகங்களில் அமர்ந்த பிறகு தங்களை மிக மேதாவிகளென்று மதித்து சைவாநுட்டானமுடையவர்களை மூடர்களென்று நிந்திக்கின்றார்கள்; சாதிபேதத்தை யொழித்துவிட வேண்டுமென்கின்றார்கள். இவர்களுள் சிலர் பிராமணர்களுடைய அறிவின் விசாலத்தையும் ஆக்கத்தையும் கண்டு, பொறாமை கொண்டு, அப்பொறாமை காரணமாக பிராமண தூஷணை செய்யத் தொடங்கி சமய ஒழுக்கங்களைப் பழித்துக்கொண்டு ஆரவாரம் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஆதலால் மெய்யன்பர்களே, உண்மைச் சைவாபிமான சீலர்களே, பல சிவ தருமங்களைச் செய்யும் நாட்டுக்கோட்டை நகரத்து உத்தம வைசியப் பிரபுக்களே, கூடுமானவரையில் ஐரோப்பியர் வழிகளைப் பின்பற்றி சமயபரிபாலனஞ் செய்யுங்கள். எங்கும் ஆங்கில பாடசாலைகள் வைத்துச் சிறுவர்களுக்குச் சைவசமய போதனை செய்யும் உபாயத்தைக் கைப்பற்றுங்கள். இதுதான் மிக மேலான சிவபுண்ணியம். இதுசெய்யாவிட்டால் மோசம்வரும். புறப்படுங்கள். இவ்வாறு செய்ய உடனே புறப்படுங்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 3.] || நள௵ தை௴—1917௵ ஜனவரி௴ || [இதழ் 1

## சைவம்.

*திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு*
*மாதலால் வானோரு மானைமுகத் தானைக்*
*காதலாற் கூப்புவர்தங் கை.*

சைவம் எனப்பெயரிய இத்தெய்வத் தமிழ்ப்பயிர், பாதகண்டமென்னும் புண்ணியபூமியில், நற்றொண்டை நாடென்னும் நன்செய்நிலத்தில், சென்னையம்பதியென்னும் செழுநீர்வயலில், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்னும் செம்மைமனத்துச் சைவ உழவர்களின் செய்நல்வினையும் கைவினைத்திறமும் பொய் தீரொழுக்கமும் பொலிந்து விளைந்தாங்கு, ஆனந்தப் பெயரிய வாண்டு சிறக்க, உலகினர் பரசிவானந்தப் பரபோகம் உண்டு சுகிக்குமாறு விளையத்தொடங்கி, பருவந்தவாது பன்னிருகதிர் விரித்து, இதுகாறும் இருபோகம் விளைந்து, இப்போது மூன்றும் போகம் விளையத்தொடங்கியது.

இப்பயிர் முதலில் விளையத்தொடங்கிய காலையில், பொறுமைமனத்துப் போலிப்பங்காளிச் சைவர்கள் சிலர் இது காகிதப்பஞ்சத்திற் காய்ந்துபோமென்றார்கள். சிலர் இதுவறுமையென்னுங் கோடையால் வாடிப்போம் என்றார்கள். சிலர் இது சைவ சமயிகளின் அபிமானக் குறைவென்னும் வெள்ளத்தால் அழிவுறும் என்றார்கள். சிலர் இவ்வுழவர் திருக்கூட்டத்தைநோக்கி, "ஐயன்மீர், இது சைவப்பயிர்செய்யுங் காலமன்று. இப்பயிருக்கு அநுகூலமாயிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய சீவநதிகள் முற்றிலும் வறண்டு மறைந்தன. மடங்களும் பணக்காரர்களுமாகிய ஏரிகள் குளம் கூவல்முதலிய நீர்நிலைகளும் பெரும்பாலும் விழலுக்கே பாய்கின்றன. தமிழ் வித்வான்களாகிய சகோதர உழவர்களும் சோறுங் கூறையும் இம்மையேதரும் சைவப்பயிர்செய்

வதைமறந்து, சாற்றுக் கவியும் சரமகவியும் பாடிப் பொய்மையாளரைப் போற்றிப் பொருள்செய்வதையே பெரிதென மதித்து, அவமே காலங் கழிக்கின்றார்கள். உங்கள் பங்காளிச் சைவ உழவர்களோ உங்களுக்கு இடையூறுசெய்த வண்ணமாகவே இருக்கிறார்கள். நல்ல சைவப்பயிர் விளையும் நன்செய் நிலங்களெல்லாம் புறச்சமயப் பயிர்கள் விளையும் புன்செய் நிலங்களாய் மாறிக் கிடக்கின்றன. ஆதலால் இக்காலத்தில் சைவப் பயிர்செய்வது உங்களால் இயல்வதன்று. இத்தொழிலைச் செய்ய முயல்வீரேல் உங்களுக்குவீண்பிரயாசையும் நட்டமுமுண்டாம். ஆதலால் இதைக் கனவிலும் நினைக்கவேண்டாம்" என்றார்கள். சிலர் "சைவ உழவர்காள், இக்காலத்தவர் பெரும்பாலார் நறுவிய வாயினவேனு முமி ழ்ந்து கடித்தின்னும் தீய விலங்கினங்களை யொத்திருக்கின்றனர். இவர் கள் கனியிருக்கக் காய்தின்பார்கள். கரும்பிருக்க இரும்பை மெல்வார் கள். விளக்கிருக்க மின்மினியைத் தேடிச்செல்வார்கள். நீங்கள் மிக வும் பாடுபட்டுப் பயிரிட்டு வலிந்து சிவபோகம் ஊட்டினாலும் உண்பாரல் லர். மாதந்தோறும் பதினாறு பக்கங்களாகிய படிகள் கொண்டதொரு பத்திரிகையாகிய அளவையால் பன்னிரண்டுமாதங்களும் விடாமல் அள ந்து கொட்டினாலும், நாளொன்றுக்கு அரைக்காசுக்கும் குறைவாயிருப் பினும், வருடம் ஒன்றுக்குப் பன்னிரண்டணாகொடுத்து வாங்கிப் புசித்து இன்புறுவாரில்லை. பிறர் தாட்சணியத்தின்பொருட்டு வாங்கினும் அதின் இனிப்பைச் சுவைப்பாரில்லை. அதில் குற்றமே தேடிக்காண்பர். அது பார்வைக்குப் பகட்டாயில்லை என்பர். கையிலெடுக்கக்கனமாயில்லை யென்பர். அதில் சொற்குற்றமும் பொருட்குற்றமுமாகிய உமியும் தவிடு மிருக்கின்றன வென்பர். சிலர் அது தங்களுக்கு ஒத்துக்கொள்ளா தென்பர். இவ்வாறு பலர் பலவாறாகக் குறைகூறுவார்கள். ஆதலால் சைவப்பயிர்செய்வதைவிட்டுத் தென்னைவைத்து வளர்த்தால் அது கள் ளைத்தரும். அதை மொந்தைகளால் அளந்து விற்றால், பலர் குறை கூறாமல் வலிந்து வந்து பொருள்கொடுத்து வாங்கிப்புசித்து ஆனந்தக் கூத்தாடுவார்கள். தங்களை மறந்து பாடுவார்கள்" என்றார்கள். வேறு சிலர் "சீ, சீ, இது அவ்வளவு நல்ல தொழிலன்று. கள்ளுண்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளே. ஆதலால் அத்தொழிலால் அதிக பொருள் சேராது. ஐரோப்பாவிலிருந்து உயர்ந்த சாராயங்களை வருவித்து விற் றால், இக்காலத்துச் சீமான்கள் பலரும் வைப்பாட்டிகளோடும் வாகனங்க ளேறிவந்து வாங்கிப்புசிப்பார்கள். அதனால் உங்களுக்கு நல்ல ஊதியம் உண்டாம்" என்றார்கள். மற்றுஞ் சிலர் "சீ, சீ இதுவும் அவ்வளவு நல்ல தொழிலன்று. நீங்கள் வைதிகர்களென்று பேர்வைத்துக்கொண்டு கள்

ளுஞ் சாராயமும் விற்றலாகாது. நாடகசாலைவைத்துப் பெண்வேடம் பூண்டு புடைவை கட்டிக்கொண்டு கூத்தாடுவீர்களானால், உங்கள் பெயர் பிரசித்தமாய்ச் சுவரெங்குங் காணப்படும். உங்கள் குலுக்கு மினுக்கு தளுக்குகளைப் பார்த்து உள்ளம்பூரித்து, பணக்காரர்கள் பலரும் மெச்சி விருதுகள் கொடுத்து வெகுமதிகள் செய்வார்கள். நீங்கள் பகலெல்லாம் படுத்துத்தூங்கலாம். உங்களுள் பலர் சைவாபிமானிகளைப்போலவும் சாமியார்களைப்போலவும் நடிக்க வல்லவர்களாயிருப்பதனாலும், படித்துப் பாடக்கற்றிருத்தலாலும், முகத்தில் மீசையில்லாதவர்களாயிருத்தலாலும், இது செய்ய உங்களுக்கு மிகவும் எளிதாகவும் இருக்கும்" என்றார்கள். இவ்வாறு பலர் பலவாறாகக் கூறுதலும், அதைக்கேட்டுச் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டம்எனப்பெயரிய உழவர்கள் நகைத்து, அவர்களைநோக்கி "சகோதரர்களே, இக்காலத்தில் சைவப்பயிர் செய்வது அரியவற்றுளெல்லாம் அரியதென்பது நாங்கள் உணராததன்று. ஆனால், ஆறிடுமேடு மடுவும்போலாம் செல்வத்தையே பொருளெனமதித்துச் செயற்கெளிய தீயகாரியங்களை நாங்கள் கனவிலும் செய்யோம். செய்தற்கரியனவாயினும், அவற்றால் எவ்வளவு கெடுதிகள் விளையினும், செயற்கரிய உத்தமகாரியங்களைச் செய்யப்பின்னிடோம்.

> செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்.

என்று பொய்யாமொழிப்புலவ ரருள்செய்தனர்.

புலிபசித்தாற் புல்லைத்தின்னுமோ!. எமது குமரகுருபரசுவாமிகளும்,

> நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
> மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
> செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
> பைங்கட் புனத்தபைங் கூழ்.

என்றருளிச்செய்தனர்.

உலகத்தில் உழவுதொழிலினுஞ் சிறந்ததொழில் வேறொன்றுமில்லை. அதுபற்றியே மேலோர்கள் "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றும் "மேழிச்செல்வங் கோழைபடாது" என்றும், "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர்பணிக்கு" என்றும் கூறினார்கள். உழவுதொழிலில்லாவிடில் உலகத்தில் எந்தக்காரியமும் நடைபெறமாட்டாது. எல்லாத்தருமங்களும் உழவு தொழிலாலேயே நடைபெறும். சர்வலோகமாதாவாகிய உமாதேவியாரும் இறைவனிடம் ஈராழி நெல்லைப்பெற்று உழவுதொழிலாற்பெருக்கி முப்பத்திரண்டறங்களையும் வளர்த்தாரெனில், உழவு தொழிலின் பெருமையாவரால் அளவிட்டுரைக்கலாகும்.

## சேக்கிழார்சுவாமிகள் புராணம்.

இமயமலை யரையன்மக டழுவக் கச்சி
  யேகம்பர் திருமேனி குழைத்த ஞான்று
சமயமவை யாறினுக்குந் தலைவிக் கீசர்
  தந்தபடி யெட்டுழக்கி ராழி நெல்லு
முமைதிருச்சு டகக்கையாற் கொடுக்க வாங்கி
  யுழவுதொழி லாற்பெருக்கி யுலக மெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண்
  டலைவர்பெரும் புகழுலகிற் றழைத்த தன்றே.

அன்றியும் நாங்கள் செய்யப்புகுந்த பயிரோ தெய்வச் சைவப்பயிர். இது கள்ளியும் முள்ளியும்போல் காடுமேடெல்லாம் விளையாது. இப்பயிர் விளையும் இடம்மாத்திரமன்றி இதை விளைப்போர் மனமும் பரிசுத்தமாயிருத்தல்வேண்டும். ஆதலால் இதை விளைப்போரும், இது தரும் சிவபோகத்தை உண்போரும் உலகிற் சிலரேயாவர். பொறாமை, உலோபம், வஞ்சகம், சுயநலப்பிரியம்முதலிய துர்க்குணங்களாகிய கற்களும் முட்களும் உள்ளவிடத்தில் இப்பயிர் விளையாது. கொல்லாமை, கள்ளாமை, கருணை, வாய்மைமுதலிய குணநதிகள் பாயுமிடத்தில் மாத்திரம் இது விளையும். மெய்யன்பர்களின் செம்மைமனமாகிய நன்செய்நிலத்தில், விடாமுயற்சி என்னும் ஏர் கொண்டுழுது, சுயநலப் பரித்தியாகம், உண்மைச்சமயாபிமானம், உழைப்பு, ஈகை என்னும் தழைகளாகிய எருவையிட்டு, அன்பென்னும் வித்தைவிதைத்து, ஆர்வத்தெண்ணீர் பாய்ச்சி, சுயநலம் பாராட்டல், புகழ்ச்சிவிரும்பல், என்னும் களைகளைக் களைந்து, சோம்பலும் செருக்குமாகிய பட்டிமாடுகளாற் கெடுதிவாராமற் காத்துப் பயிர்செய்தால், இப்பயிர் செழித்தோங்கி வளர்ந்து சிவானந்தச் செழுங்கதிர்விடும். ஆதலால் எவ்வளவு பாடுபட்டாயினும் செப்பரும் பெருமைவாய்ந்த சைவப்பயிர் செய்யப்பின்னிடோம்.

இன்சொல் விளைநில னாயீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

என்று பெரியோரும் பணித்துள்ளார். என்றுகூறி இச்சைவப் பயிரைத் தங்களுயிரென மதித்துப்போற்றிப் பாராட்டி வளர்ப்பாராயினர். அதற்கேற்றபடி இப்பயிர் முளைக்கும்போதே செழித்துவளர்ந்து சிவமயமாய்த் தோன்றுதலும், அதைக்கண்ணுற்ற உண்மைச் சைவாபிமானசீலர்களாகிய சகோதர உழவர்கள் பலரும், உடல் பூரித்து, உள்ளங்

குளிர்ந்து, உறவினரை விளித்து, "வாருங்கள், வாருங்கள். வந்து நம் சைவப்பயிரைப் பாருங்கள், பாருங்கள். இதனால் விளையும் சிவபோகாமுதமுண்டு பிறவிப்பசிநோய் தீருங்கள், தீருங்கள். இப்பைங்கூழ் "பண்ணியபயிரிற் புண்ணியம்தெரியும்" என்றபடி முளையிலேயே வேர்முதல் நுனிவரையில் சைவமணம் வீசுகின்றது. இது சென்னைச் சிவஅடியார் திருக்கூட்டத்தினர் பலவருடங்களாகச் செய்துவந்த சிவபுண்ணியத்தின் விளைவுபோலும்" என்றுகூறி, அளவளாவி, அன்புவித்திடுவாரும், ஆர்வநீர்பாய்ச்சுவாரும், இடுக்கண் களைகளைவாரும், ஈகைபெருவிடுவாருமாய், இப்பைங்கூழைப்போற்றி வளர்ப்பாராயினர். அதனால் இத்தெய்வப்பயிர் நாளுக்குநாள் ஓங்கிவளர்ந்து உலகுக்கு உவட்டாத சிவபோகாமுதம் ஊட்டுவதாயிற்று. இதற்கு அச்சுக்கூடமாகிய வேலிகோல்வதற்கு இரங்கோனிலிருக்கும் சகோதர உழவர்களாகிய ஸ்ரீமான் செவு-சித-சொக்கலிங்கச் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ-சு-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களும், மிகுந்த பிரயாசையெடுத்துக்கொண்டு இதுவரையில் நூற்றெட்டு ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து, ஆயிரம் ரூபாவரையில் சேகரித்தனுப்பி உபகரித்ததுமன்றி, இன்னும் வேண்டிய உதவிகள் பலவுஞ் செய்யவேண்டி விடாமுயற்சிசெய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு "என்று முகமனியம்பா தவர்கண்ணும், சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்" என்பதற்கிணங்க, ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல், வெறும் அன்பு காரணமாக இவர்கள் பலரும் செய்துவரும் பேருபகாரங்களுக்குச் சைவ உலகம் செயற்பாலதாகிய கைம்மாறும் உளதோ!. "மாரிமாட் டென்னாற்றுங்கொல்லோ வுலகு!." இவ்வாறு இச்சைவப்பயிரை உடனிருந்து வளர்த்துவரும் சிவநேயச் செல்வர்களின் சீர்பாதகமலங்களைச் சிரத்தினும், செய்வினையும் செய்வானும், செய்விப்பானும் தாமேயாய சிவபெருமான் அருட்டிருவடிகளைச் சிந்தையினும்வைத்து, இம்மூன்றும் மலரை எழுதத்தொடங்கினேன்.

பத்திரிகாசிரியன்.

## சிவஞானபோதம்.

(இரண்டாஞ் சூத்திரம்,)

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே.

(இ-ள்.) முதற் சூத்திரத்திநூற் சித்தாந்தஞ்செய்யப்பட்ட சங்கார காரணனாகிய சிவபெருமான்—அவையே ஆய்=அவ்வுயிர்களேயாய்—தானே ஆய்=அவைகளுக்கு வேறுமாய்—அவையே தானேஆய்=உடனுமாய் (நின்று)—ஆணையின்=தமது ஆணையினால், (அதாவது, ஆணையென்னும் பரியாயப்பெயருடைய சிற்சத்தியால் வரும்)—இருவினையின்=(நல்வினை தீவினைகள் என்னும்) இருவினைகளால்—போக்குவரவு புரிய=அவ்வுயிர்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம்—ஆணையின்=அவ்வாணையினின்றும்—நீக்கமின்றி=பிரிப்பின்றி—நிற்கும்=(சமவேதமாய்) நிற்பன் (எ-று.)

"அவையே தானேயாய்" என்பதனை அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்று இரட்டுறமொழிந்துகொள்க. "ஆய்–புரிய நிற்கும்" எனவே, சிவபெருமான் உயிர்களைப்போற் காரணத்தாற் செய்யாமல் சங்கற்பமாத்திரத்தாற் செய்வர் என்பது பெறப்பட்டது. "ஆணையின்" என்பதனைச் சிங்கநோக்காய் "இருவினை" என்பதன் முன்னும் வைத்துப்பொருளுரைக்க. "அன்றே" என்பது அசை; இதற்கு அனாதியே இவ்வாறு நிற்கும் என்று பொருள் கூறினும் அமையும். "அவை" எனச்சுட்டியது முதற் சூத்திரத்திற்கூறிய சேதனப் பிரபஞ்சத்தை (அதாவது உயிர்களை).

சிவபெருமான் கலப்பினால் உடலின் உயிர்போலிருத்தலால் உயிர்களேயாயிருக்கின்றார் என்றும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போலிருத்தலால் உயிர்களுக்கு வேறாயிருக்கின்றாரென்றும், உயிருக்கு உயிராயிருக்குந் தன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல் உடனுமாய் இருக்கின்றார் என்றும் சொல்லப்பட்டது. இவை பின்வருவனவற்றால் இன்னும் தெளிவாய் விளங்கும்.

இச்சூத்திரம் நான்கு அதிகரணங்களையுடையது. அவை வருமாறு:—

க-வது—அவையே தானேயாய்
உ-வது—ஆணையினிருவினையின்
ங-வது—போக்குவரவு புரிய
ச-வது—ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

க-வது—அரன் உயிர்களிலிரண்டற நிற்பன்.
உ-வது—உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன்.
ஈ-வது—உயிர்கள் அச்சுமாறியே பிறக்கும்.
ச-வது—அரன் சர்வ வியாபகன்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

க-வது. ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கும் என்றது, அத்துவிதமென்ற சொல்லானே யேகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு.

உ-வது. இனி இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வருமென்றது, ஒருநகரியைக்காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவன தாக்கினையாகலான்.

ஈ-வது. இனி இவ்வான்மாக்கள் மாறிப்பிறந்து வருமென்றது, தோற்றமுமீறு முள்ளதற்கல்லது உளதாதலின்மையான்.

ச-வது. இனி நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது, அவன் ஏகாநேக மிரண்டுமின்றிச் சர்வவியாபியாய் நிற்றலான்.

## இச்சூத்திரத்தின் உதாரண வெண்பாக்கள் பத்து.

இனி இச்சூத்திரத்தின்பொருளை ஒவ்வொரு அதிகாரணமாக, அவ்வவற்றின் சூர்ணிகை வார்த்திகங்களோடும் உதாரணவெண்பாக்களோடும் சேர்த்து விளக்குவாம்.

## முதலதிகரணம்.—அவையே தானேயாய்.

(இ-ள்.) முதல்வன் உயிர்களேயாயும், அவைகளுக்கு வேறாயும், உடனாயும் இரண்டற நின்று. (எ-று.)

இவ்வதிகாரணத்தில் "தன்னாற் கூறப்படும் பொருள்" முதலிய ஐந்தும் வருமாறு:—

க-வது. தன்னாற் கூறப்படும் பொருள்.—
அரன் உயிர்களில் இரண்டற நிற்பன்.

உ-வது. ஐயப்பாடு.—
முதல்வனும் உயிர்களும், அபேதமோ, பேதமோ, பேதாபேதமோ.

௩-வது. பிறர்கூறும் பக்கம்.—

(1) முதல்வனும் உயிர்களும், பொன்னும் பொன்னாலாகிய பணியும் போல், அபேதமாம். (இவ்வாறு கூறுவோர் மாயாவாதிகள்.)

(2) முதல்வனும் உயிர்களும், ஒளியும் இருளும்போல், பேதமாம். (இவ்வாறு கூறுவோர் மத்துவர்.)

(3) முதல்வனும் உயிர்களும், சொல்லும் பொருளும்போல், பேதாபேதமாம். (இவ்வாறு கூறுவோர் பாஞ்சராத்திரிகள்.)

௪-வது. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு.—

முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற்றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல் உடனுமாய் நிற்பன். இவ்வாறு அவன் நிற்கும் நிலையே அத்துவிதநிலையென்று வேதம் கூறும்.

௫-வது, இயைபு—உதாரண வெண்பா.

கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி
யவனுளமா இல்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு. (௧)

(இ—ள்.) உள்ளம்=உயிரானது—கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு=நரம்புமுதலியவற்றாற் கட்டப்படும் உடம்பினையும், ஐம்பொறி முதலிய கருவிகளையுங் கைக்கொண்டுநின்று—இட்டது ஒருபேர் அழைக்க=உடம்புக்கு இட்டபெயரால் பிறர் அழைக்க—என் என்றங்கு=என் என்பதுபோல்—ஒட்டி=முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும்.—அங்கு=அதுபோல்—அவன் உளம் ஆகில்லான்=அம் முதல்வன் உயிராகமாட்டான்.—உளம் அவனுமாட்டாது=உயிர் முதல்வனாகமாட்டாது.—அவன் உளமாய் அல்லனும் ஆம்=(அவ்வாறாயினும்) முதல்வன் உயிராயும் அதின் வேறாயும் நிற்பன் (எ—று.)

ஒட்டி என்பது பெயர்—வினையெச்சமாகக் கொள்ளின் சிறப்புமை விரித்துரைக்க—ஒட்டுதல்=பொருந்துதல்.

உயிரானது உடம்போடுகூடி உடம்புவேறு தான்வேறு என்னாதபடி (அத்துவிதமாய்) கலந்து, உடம்புக்குண்டாகும் ஆக்கக் கேடுகளைத் தனக்குண்டாவனவாக அனுபவித்து, உடம்புக்கிட்டபெயரால் பிறர் அழைக்கத்தான் ஏன் என்று வருவதனாலும், பலர் கூடியிருக்குமிடத்தில் உடம்புக்கிட்டபெயரால் ஒருவனையழைக்கின், அழைக்கப்பட்டவன்

ஒருவனே என் என்று வருதலினாலும், அவன் அவ்வாறு வருதற்கு வேறொருகாரணம் காணப்படாமையானும், அருத்தாபத்தியளவையால், அவ்வுயிர் உடம்பென்றும் தானென்றும் வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் பெறப்பட்டது. அப்படி நிற்பினும் உயிர் உடம்பாகாது. உடம்பு உயிராகாது. உயிர் உயிரே. உடம்பு உடம்பே. அதுபோல, முதல்வன் உயிரோடு கலப்பினால் அவைவேறு தான்வேறு என்னாதபடி அபேதமாய் நின்றும் அவ்வுயிராகமாட்டான். உயிர் முதல்வனாகமாட்டாது. முதல்வன் முதல்வனே. உயிர் உயிரே. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதன் வேறாயும் நிற்பன். உயிர் அங்ஙனம் நில்லாது.

ஒரு பொருளே அபேதம், பேதம், பேதாபேதம் என்னும் மூவகை இயல்பையும் உடைத்தாதல் எங்ஙனம் கூடும் என்னும் சந்தேகம் உண்டாகாதவாறு இவ்வெண்பா உடலுயிர் உவமையால் முதல்வனின் அபேதநிலை இத்தன்மைத்தென விளக்குகின்றது.

உதாரணவெண்பா.

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளேகா—ணொன்றின்றா
லக்கரங்க ளின்றா மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு. (உ)

இவ்வெண்பா, வேதமானது அத்துவிதம் என்றும் ஏகம் என்றும் கூறவும், அதற்குமாறாக பேதப்படக்கூறலாமோ என்பார்க்கு, வேதம் அவ்வாறு கூறுவதின்கருத்து இத்தன்மைத்தென விளக்கி, இறைவன் உயிர்களோடு (தானேயாய்) அபேதமாய் நிற்கும் இயல்பை உதாரணத்தால் வலியுறுத்துகின்றது.

(இ—ள்.) இருக்கு ஒன்று என்றது ஒன்றேகாண்—வேதம் ஒன்று என்பதற்குப்பொருள், ஒன்றென்பதேயாம்.—பதி ஒன்றே—(அதற்குத் தாற்பரியம்) பதிப்பொருள் ஒன்றே (இரண்டில்லை என்பதாம்). ஒன்று என்ற நீ பசு ஆம் காண்—(இதனையறியாது) ஒன்றென்று சொல்லுகிற நீ (அப்பதிப்பொருளின்வேறாய) பசுவென்றறிவாயாக. (பதியும் சேதனம், யானும் சேதனமாக என்னைப் பசுவென்பதென்னையெனில்)—பாசத் தோடுளை—நீ மலத்தோடு கட்டுண்டிருக்கின்றாய் (ஆதலால் நீ பசு என்னப்பட்டாய்). (யானும் பதியும் வெவ்வேறுபொருள்களானால், வேதம் "பிரமம் இல்லையாயின் ஒருபொருளும் இல்லை" என்று கூறுவதேன்? என்னில்)—அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்று ஆம்—அகர உயிரில்லையாயின் எழுத்துகள் இல்லையாம்—(என்னும்—என்று சொல்லு

கிற)—இக்கிரமத்து—இம்முறைமைபற்றி—ஒன்று இன்று என்னும்—(வேதம் பிரமப்பொருள் இல்லையாயின்) ஒருபொருளும் இல்லை யென்றோதும் (எ—று).

வேதம் ஏகம் என்றும் அத்துவிதம் என்றும் கூறுவதனை "ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்தே" என்னும் யசுர்வேத வசனத்தாலும், "ஏகோஹி ருத்ரோ நத்விதீயாயதஸ்தே" என்னும் ஸ்வேதாஸ் உபநிஷத்தாலும், "ஏகமே வாத்விதீயம்" என்னும் சாந்தோக்கிய உபநிஷத்தாலும், "சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம்" என்னும் மாண்டூக்ய உபநிஷத்தாலும் உணர்க.

"நத்விதீயாய" என்னும் வடமொழியின் முதலிலுள்ள நகரமெய் நீங்கிவிட அது "அத்விதீயாய" என நிற்கும். நகரமும் அகரமும் ஒருபொருளுடையனவாம். நகரம் நீங்கிவிடினும், அம்மெய்யின்மேல் நின்ற அகரம் இன்மை, அன்மை, மறுதலை என்னும் முப்பொருளையும் உணர்த்தும். இவற்றுள் மாயாவாதிகள் இன்மைப்பொருள் ஒன்று மாத்திரம் உரைத்து அத்துவிதம் என்னுஞ் சொல்லுக்கு "இரண்டில்லை, ஒன்றே" என்று பொருளுரைப்பர். அவ்வாறு பொருளுரைப்பது குற்றமாம் என்பதனை விளக்கவேண்டி நமது மெய்கண்டநாதர்.

"அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்துமாயிட்டு" என்று சூர்ணிகையுரை யருளிச்செய்தனர்.

இச்சூர்ணிகையுரையின் பொருள் வருமாறு:—அத்துவிதம் என்ற சொல்லின் நகரமானது இன்மை அன்மை மறுதலை என்னும் முப்பொருளுணர்த்தும். அவற்றுள் இன்மைப் பொருளைக்கொண்டு, அத்துவிதமென்ற சொல்மாத்திரத்தாலேயே ஒருபொருள் என்பது பொருத்தமாம் என்றுசொல்லில், ஒருபொருள் தானேதன்னை ஒன்று என்று சொல்லவேண்டுவதில்லை, ஆதலால் அவ்வாறு சொல்லும் பொருள் வேறுண்டென்பது பெறப்படும். அன்றியும், எண்ணுப்பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருளையே யுணர்த்திப் பொதுமையில் நிற்பதன்றி, ஏனைச்சொற்களின்மேல் வந்த நகரம்போல் இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்தாமையினால் அத்துவிதம் என்ற சொல்லே வேறு காரணம் வேண்டாது வேறன்மையையுணர்த்தும். இதனால் ஆன்மாக்கள் பலவும் முதல்வன் தானேயாய் நிற்குமென்பது கொள்ளற்பாற்று (எ—ம்.)

இறைவனும் உயிரும் வெவ்வேறு பொருள்கள் என்பதனை யுணராது, ஒரு பொருளே என்றுமயங்கி "நான் ப்ரஹ்மம்" எனப்பொருள் பயக்கும் "அஹம் ப்ரஹ்மம்" என்றுகூறி இடர்ப்படுவார்க்கிரங்கியே, யசுர்வேதமுடிவு "அஹம் பரஹ்மம்" என்று கூறுது "நான் ப்ரஹ்மம் ஆகின்றேன்" என்னும் பொருள்தரும் "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்று கூறும். வேதங்களிற் சிறந்த சாமவேதத்தின் முடிவு "அது நீ என்று பொருள்தரும் "தத்வம்" எனக்கூறுது, "அது நீயாகின்றாய்" என்று பொருள்தரும் "தத்வமஸி" என்று கோஷிக்கும். சிவம் ஆத்துமாவின் அறிவினுள் அறிவாய் விளங்கும் ஒற்றுமையை நோக்கி ருக்கு வேதத்தினந்தம் "ப்ரக்ஞானம் ப்ரஹ்மம்" என்றும், ஆத்மா சிவசக்தியாத்மகமா யிருத்தலைப்பற்றி அதர்வணசிரசு "அயமாத்மா ப்ரஹ்மம்" என்றும் வழங்கா நிற்கும். அந்நான்கு மகாவாக்கியங்களும் சிவஜீவர்கள் ஒன்றேயென்றும், இரண்டேயென்றும் பொருள்பயத்தலின்றி, ஒன்றுமிரண்டுமென்றி நிற்கும் நிலையின வென்று கூறுநிற்கும்.

(இன்னும்வரும்.)

பத்திரிகாசிரியன்.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

உலகத்தில் ஒவ்வொரு சமயத்தாருள்ளும், ஒவ்வொரு தேசத்தாருள்ளும், ஒவ்வொரு சாதியாருள்ளும், சுயநலப்பரித்தியாகஞ் செய்து கொண்டு பொதுஜன நன்மையின்பொருட்டு உழைப்பவர்கள் மிகச் சிலரே. அவ்வாறு உழைப்பவர்களை உயர்வாகமதித்து உற்சாகப்படுத்தி அவர்களுக்குவேண்டிய உதவிகளைச்செய்தல் அவ்வச் சனசமூகத்தாருடைய கடமையாம். ஆதலால் கிறிஸ்தவர்கள் தங்கள் சமயாபிவிருத்தியின்பொருட்டு உழைப்பவர்கள், வேதனம்பெற்று உழைப்பவர்களாயினும், அவர்களால் உண்டாகும் சமயாபிவிருத்தியை நோக்கி அவர்களைக் கௌரவித்து, உயர்ந்த பதவிகளில் அமர்வித்து, வேண்டும் பொருள்முதலியன கொடுத்துப்பூசிக்கிறார்கள். அன்றியும், அவ்வாறு உழைப்போர்க்கு மாத்திரமன்றி அவர்களுக்குப்பின் அவர்களுடைய சந்ததியார்களுக்கும் கௌரவப்பட்டங்களும் உபகாரச்சம்பளமும் கொடுக்கிறார்கள். இதனால் அச்சமயமானது உலகெங்கும் விரைந்து பரவுகின்றது. பிறசமயிகளின் செய்கை இவ்வாறாக இக்காலத்துச் சைவசமயிகளின் செய்கை இதற்கு மாறாயிருக்கிறது. இவர்கள் சுணங்கனும் சேவலும் சுசாதியைப் பகைப்பதுபோல் தம்மினத்தவரைப் பகைப்பார்கள். தமிழ்

வித்வான்கள் தமிழ் வித்வான்களைப்பகைப்பார்கள். தங்களைச் சைவாபிமானிகளென்போர் சைவாபிமானிகளைப் பகைத்திடுவர். இது புகழேந்தி ஒட்டக்கூத்தர்முதலிய புலவர்களின் சரித்திரங்களாலும், ஸ்ரீலஸ்ரீ யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் முதலியவர்களின் சரித்திரங்களாலும் விளங்கும். ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவரைப் பகைத்துப் படாதபாடுபடுத்தினார். பாரதம்பாடிய வில்லிபுத்தூரர் தேசங்கடோறுஞ்சென்று வித்வான்களை வாதில்வென்று அவர்களின் காதுகளை அறுத்துக் கர்னபங்கஞ்செய்து கொண்டிருந்து, கடைசியாக ஸ்ரீஅருணாசலத்தி லெழுந்தருளியிருந்த அருணகிரிசுவாமிகளிடம் வாதஞ்செய்து அவரை வெல்லமாட்டாமல் அவரிடம் கர்னதானம் பெற்றனர். இவைபோன்ற சரித்திரங்களால் இக்காலத்துப்புலவர்கள் மாத்திரமன்றி முற்காலத்துப்புலவர்களும் ஒருவரையொருவர் பகைத்தனர் என்பது விளங்கும்.

காலதேசவர்த்தமானங்களை நோக்கி, சபைதாபித்தும், நூல்கள் இயற்றியும் அச்சிட்டும், பாடசாலைகள்வைத்தும், பிறர்செய்த இடையூறுகளாற் சலிக்காமலும், போலிநாவலர்களைப்போல் பொருளீட்டுவதையே பெரிதெனக் கருதாமலும், தாட்சிணியமின்றி சைவசமயத்தைப் பாதுகாக்கமுற்பட்டவர் ஸ்ரீலஸ்ரீ ௳-ஆறுமுகநாவலர் ஒருவரே. அப்பெரியாரியற்றிய பாலபாடங்களும், சைவ வினாவிடைகளும், பிற நூல்களும், அவர் நிறுவிய பாடசாலையும், அச்சுக்கூடமும், அச்சிட்ட நூல்களும், அவர் உழைப்பையும், உண்மைச் சைவாபிமானத்தையும் அறிவின் நுட்பத்தையும், குன்றிலிட்டவிளக்கென என்றைக்கும் விளக்காநிற்கும். அவர்பெருமை யிவ்வாறிருக்கவும், அவருக்குச் சைவ சமயிகள் செய்த இடையூறுகளுக்கு அளவில்லை. அவர், "நமக்குப்பகைவராயிருந்து நாம் தொடங்கிய சைவசமய பரிபாலனத்திற்கு இடையூறு விளைப்பவர்கள் சைவசமயிகளே, ஏனைச்சமயிகளல்லர். முற்காலத்தில் சமணர்முதலியோர் சைவர்களுக்கு விரோதிகளாயிருந்தார்கள். இக்காலத்தில் சைவாபிமானிகளுக்குச் சைவரே விரோதிகளாயிருக்கின்றனர். ஐயோ, என்செய்வது" என்று வருந்திமொழிந்தனர். அவர் காலத்தில் அவருக்கு இடையூறுசெய்ததுபோலவே இக்காலத்திலும் சைவசமயிகளே சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற்கு இடையூறு செய்கிறார்கள். தமிழ்நாட்டில் சென்னைமாநகரானது தலைநகரமாயிருத்தலினால் இங்குள்ள சைவர்கள் பலர் உண்மையாய் ஒத்து உழைப்பார்களானால் எளிதில் பலவழிகளில் சைவ சமயபரிபாலனஞ் செய்யலாம். இவர்கள் உடனிருந்து ஒத்து உழைக்காவிட்டாலும், உழைப்ப

வர்களுக்கு இடையூறு செய்யாமல் வாளாவிருப்பினும்போதுமே. மூங்கில்கள் ஒன்றோடொன் றுராய்ந்து தீப்பற்றிப் புதரைக்கொளுத்தி நாசமாவதுபோல், இவர்கள் தங்களைச் சைவாபிமானிகளென்று சொல்லிக்கொண்டு ஒருவரையொருவர் பகைத்துத் தாங்களே சைவசமயத்தையழிக்கின்றார்கள். பிறசமயிகள் சமயாபிமானமுள்ளவர்களுக்கு வேதனம் கொடுத்து ஊக்கம் உண்டாக்கினால், இவர்கள் வேதனைகொடுத்து வெறுப்புண்டாக்குகின்றார்கள்.

இவர்கள் செய்துவந்த இடையூறுகளையும், இச்சபையின் அருமை பெருமைகளையும் இப்பத்திரிகையில் வெளியிடுவதைப்பலமுறையும் உத்தேசித்தேன். ஆனால் இப்பத்திரிகை உருவிற் சிறிதாயிருப்பதனால் அவைகளைப் பிரசுரிக்க இடமின்மையைக் கருதியும், ''யதார்த்தவாதி வெகுஜனவிரோதி'' என்பதற்கிணங்கப் பல்லோர் பகையுண்டாம் என்பதைநினைந்தும், தற்புகழ்ச்சியென்னும் குற்றமுண்டாகலாமென வஞ்சியும்,

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்—றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

என்னும் நீதிநெறியைக் கடைப்பிடித்து அவ்வாறு செய்தலைத் தவிர்த்தேன்.

ஆயினும், இச்சபையார் இப்போது தொடங்கியிருக்கும் மிக அரிய பொதுக்காரியங்கள், பொதுஜன உதவியால் நடைபெற வேண்டியிருத்தலாலும், பொதுஜனங்கள் இச்சபையின் உண்மையினையும் உழைப்பையும் உணர்ந்தாலன்றி உதவிசெய்வது கூடாமையாலும், இடுக்கண் விளைத்தலும், புறங்கூறலுமாகிய களைகளைக் களைந்தெறிந்தாலன்றி நாம் செய்யப்புகுந்த சைவப்பயிர் செழித்துவளர்வது கூடாமையாலும்,

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை யிழுக்காண் பரிது.

என்னும் குமரகுருபர ருபதேசத்தைக் கடைப்பிடித்து, இப்பத்திரிகையில் இனிநான்கு பக்கங்களை யதிகமாய்ச்சேர்த்தேனும், இச்சபையின் அரு

மைபெருமைகளையும், இதற்கு நேர்ந்த இடையூறுகளையும், எவ்விதமான இடையூறுகளையும் பொருள்செய்யாமல் இச்சபையார் தாங்கள் தொடங்கிய எந்தக்காரியங்களையும் நிறைவேற்றிச் சைவசமய பரிபாலனஞ் செய்து வருதலையும், உண்மைச் சைவாபிமானிகள் உள்ளங்களிக்குமாறு, இனி வெளியிடத் தொடங்கினேன்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் என்பது இடபேதமும் சாதிபேதமும் பாராட்டாமல், சைவசமயிகளியாவரும் ஒன்றுகூடிச் சைவசமயபரிபாலனம்பண்ணவேண்டி, சென்னையில் தாபித்து நடைபெற்று வரும் மகாசபையாம். ஆதலால் இது சென்னைவாசிகளுக்கு மாத்திரமன்றி, சைவசமயிகள் யாவருக்கும் உரிமையுடைய மகாசபையாம். சைவசமயிகள் எவர்களும் இதின் அங்கத்தினராய் அத்தியட்சர்களாகவும், போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், காரியதரிசிகளாகவும், சபைத்தலைவர்களாகவும் இருந்து சைவ சமயபரிபாலனஞ்செய்பவும், செய்விக்கவும் உரிமையுடையவர்களே. இவ்வுரிமை எல்லோருக்கும் உண்டாயிருக்கும்வண்ணமாக இச்சபை அரசாங்கசட்டத்தின்படி ரிஜிஸ்ட்டர்செய்யப்பெற்றுள்ளது. (இன்னும்வரும்)

பத்திரிகாசிரியன்.

---

## சந்தான குரவர்.

---

### சைவப்பத்திராசிரியரவர்களுக்கு.

ஐயா,

சைவசமயத்தில் சந்தான குரவர்களெனப்படுவார் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவரும், திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியரும், திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரும், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியருமன்றோ? இவர்க்கு முன்னும் பின்னும் ஆசாரியர் பலர் இருப்பினும் உலகத்தில் சந்தானாசாரியரென்று பலராலுங்கொண்டாடப்படுபவர் இந்நால்வருமேயாவர். இதற்கு வேறு சாட்சிவேண்டியதில்லையாயினும் சில கூறுவேன். திருவாரூர்ச் சுவாமிநாததேசிக ரென்பவரியற்றிய சந்தானாசாரிய புராண சங்கிரகத்தில் கூறப்படுவது இந்நால்வருடைய சரிதமேயாகும். காஞ்சிப்புராணத்தின் முகத்தில் சிவஞானயோகிகள் வரலாறு எழுதிய இராமநாதபுரம் இராமசுவாமிப்பிள்ளையும் திருக்கைலாசபரம்பரை ஆசாரியர்களாக இந்நால்வரையுமே முதலிலெடுத்துக் கூறுகின்றனர். இந்நால்வருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரும் தாமியற்றிய சிவப்பிரகாசத்துள்,—

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல்பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர்பாரிற்
பாவிய சத்தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம்வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலான்மாறு
விரவுபுகழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்தரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மையோரே"

என்று தமக்கு முன்னிருந்த மெய்கண்ட தேவர்முதலிய மூவரையும் சந்தான குரவரென்றனர்.

இங்ஙனமாகவும் சிற்றம்பலநாடிகள் மாணாக்கராகிய தத்துவப்பிரகாசசுவாமிகளென்பவர் தாமியற்றிய தத்துவப்பிரகாசத்தில் சந்தான குரவர் வணக்கம் கூறுமிடத்து,

"நந்தி சனற்குமரன் சத்திய ஞானியடிசேர்
நாதனும் பரஞ்சோதி மெய்கண்டதேவன்
முந்து சண்பையர்தலைவன் கொற்றவன்குடியே
முதுபதியா முமாபதியிம்முறைமை யிலேயாண்ட
செந்திருவின்பயன் சிற்றம்பல நாடிஞன்மெய்ச்
சிவஞான வடிவான திருமேனியடைவாய்த்
தந்தவிவர் சந்தானகுரவரிவர் மலர்த்தாள்
தப்பாம லென்மனத்தி லொப்பாகவைப்பாம்"

என்று உமாபதி சிவாசாரியருக்குக் குருவாகிய திருப்பெண்ணாகடத்து மறைஞானசம்பந்த சிவாசாரியரை நீக்கியும் உமாபதிசிவாசாரியருக்குப் பின்வந்தவரும் தமக்குக் குருவுமாகிய சிற்றம்பலநாடிகளைச் சேர்த்தும் துதி சொல்லினர். சிற்றம்பலநாடிகள் மெய்கண்டதேவர் சந்தானத்தில் வந்தவராதலால் அவரைச்சேர்த்ததில் குற்றமுளதாகக் காணவில்லை; மறைஞான சம்பந்தசிவாசாரியரை நீக்கினது யாது காரணத்தால் என்பது விளங்கவில்லை. பத்திராசிரியரே, நீங்களாவது உங்கள் பத்திரிகையை வாசிக்கும் மற்றைய சித்தாந்திகளாவது அன்புகூர்ந்து எனக்கு நிகழ்ந்த இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பீர்களென்று உங்கள் இருதிறத்தாரையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த விஷயத்தில் இன்னுமொரு சந்தேகமெனக்குண்டு. அஃதென்னெனில், கூறுவேன். மேலெடுத்துக்காட்டிய 'நந்தி சனற்குமரன் என்றற்றொடக்கத்துச் செய்யுளில் தத்துவப்பிரகாசர் அருணந்திசிவாசாரியரைச் 'சண்பையர் தலைவர்' என்கின்றனர். இப்பாட்டில் மாத்திரமன்று,

"நற்பொருளாம் பரன்பாலி னந்தியருணூலும்
நல்வழியா மெய்கண்டான் சண்பையர்தநாதன்
அற்புதமா முமாபதிதா மிவருரைத்த நூலும்
ஆகமத்தி னுட்பொருளு மளப்பில் பரசமயப்
புற்புதமா நிலையில் பொருளனைத்தும் பார்த்துப்
பொருண்மைப் பாலறியாத மருண்மைப்பாலுடையேன்
சொற்பொருளாற்றத் துவப்பிர காசமெனச் சொன்னேன்
சொல்லிரவி யொளியைமின் மினிதொடரு நெறியே"

என்று தமது நூல் வந்தவழியும் நூற்பெயரும் கூறுமிடத்தும் அருணந்திசிவாசாரியரைச் "சண்பையர்நாதன்" என்கின்றனர். சண்பையர் நாதன் என்பது சண்பை நகரத்தார்க்குத் தலைவன் என்று பொருள் படும். சண்பைநகரமென்பது சீகாழி. அருணந்திசிவாசாரியார் சீகாழியிற் பிறந்தவரென்றாவது சீகாழியைச் சார்ந்தவரென்றாவது வேறெங்கும் சொல்லப்படவில்லையே. அவருடைய வூர் திருத்துறையூரன்றோ? பின்னர் அவரைச் சண்பைநாதர் என்பது எங்ஙனம்?

இன்னுமொன்று. சிற்றம்பலநாடிகளைப் பலரும் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர் மாணாக்கரென்பர். மேற்கூறிய சந்தானாசாரிய புராண சங்கிரகமுடையாரும் மெய்கண்டதேவர் புராணத்தில்,—

"மெய்யுணர்ந்தார் புகழு மருணந்தியோடு
மேவதிகை மனவாசகங் கடந்தார்
பொய்யகல் சிற்றம்பலநாடி கண்முன்னாகப்
புகழுறு மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மர்
மையகலும் பரிபாக நன்குணர்ந்து
மன்னு சிவதீக்கைமுறை மருவச்செய்து
தெய்வவருண் மேவிடமுப் பொருளுணர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்துபின்னர்"

எனச் சிற்றம்பலநாடிகளை மெய்கண்டதேவருக்கு மாணாக்கராக்குவர். ஆயினும் மேலெடுத்துக்காட்டிய "நந்திசனற்குமாரன்" என்றற்றொடக்கத்துத் தத்துவப்பிரகாசச் செய்யுள் சிற்றம்பலநாடிகள் நேரே மெய்கண்டதேவர் மாணாக்கரல்லரென்றும், அம்மெய்கண்டதேவர் சந்தானத்தில் உமாபதி சிவாசாரியருக்குப் பின் பலதலைமுறை கழித்துவந்தவரென்றும் நன்கு தெரிக்கும். இவ்விருகூற்றில் சிற்றம்பலநாடிகளோடொருகாலத்திருந்தவராகிய தத்துவப்பிரகாசர் கூற்றன்றிப் பலநூற்றாண்டுகளுக்குப்பின் வந்த சந்தானாசாரிய புராணசங்கிரக முடையார் கூற்றுக்கொள்ளத் தக்கதன்று.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை